நூல்கள், வேதங்கள் முதலியவற்றில் ஜாதி என்பது எங்கும் சொல்லப்படவில்லை ; பின்னால் வந்த ஆட்கள் தான் இதையெல்லாம் செய்தார்கள் ; இன்று பிராமணர்களை விட பிராமணர்கள் அல்லாதார் தொல்லை தான் இப்போது தமிழகத்திலே இந்தியாவிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் ஆட்சியாக இருந்தாலும், நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களின் ஆட்சியாக இருந்தாலும், பிராமணர் அல்லாதாரின் தொல்லை தான் அதிகம் இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை மறுத்துவிடுவதில் பயனில்லை.

அதை யார் செய்தாலும் குற்றம் என்று தகக் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், ஜாதி பெயரை யாரும் போட்டுக் கொள்ளக் கூடாது என்ற வகையிலே அரசு சட்டம் கொண்டு வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர் என்று கொண்டு வந்தாலும் அதிலே ஆயிரம் பெயரை வைத்து கொண்டிருப்பதிலே பயனில்லை. இவற்றில் எல்லாம் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்த சந்தர்ப்பம் தந்ததற்காக நன்றியைக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 30—3—1981 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8—58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

243. தமிழ்நாடு 1957ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப் படம்) துறையின் 1980ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 25ஆம் நாளிடப்பெற்ற 903ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்பட)முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS